தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

அரையாண்டுத் தேர்வு - கல்வியாண்டு 2009 - 2010

தமிழ்மொழி - ஆண்டு 6

சுட்டெண்:... நேரம்: 150 நிமிடங்கள்

1) கீழ்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழிலுள்ள உயிர்மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

   அ) 247 ஆ) 216 இ) 12 ஈ) 18

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தமிழின் இனிமை காரணமாக அதற்கு வழங்கும் பெயர்களில் ஒன்று

   அ) சங்கத்தமிழ் ஆ) தேன்தமிழ் இ) செந்தமிழ் ஈ) பைந்தமிழ்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. உயர்திணையைக் குறித்து நிற்பது

   அ) கணினி ஆ) இறைவன் இ) மரம் ஈ) கல்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. ஆண் பெண் என்ற பாகுபாடின்றி ஒன்றைக் குறிப்பது

   அ) பலர்பால் ஆ) பலவின்பால் இ) ஒன்றன்பால் ஈ) ஆண்பால்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. நாற்பத்து நான்கு ஆண்டுகள் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன்

   அ) சேனன் குத்திகன் ஆ) எல்லாளன் இ) சங்கிலியன் ஈ) சூரத்தீசன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. கீழ்வரும் சொற்களில் இறந்தகாலம் குறித்து நிற்கும் சொல்

   அ) படிக்கின்றார்கள் ஆ) படித்தான் இ) படிக்கிறாள் ஈ) படிப்பார்கள்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. 'சிறுதுளி பெரு வெள்ளம்' என்ற பழமொழி குறித்து நிற்கும் பொருள்

அ) மழை பெய்தால் வெள்ளம் வரும்

ஆ) சேமிப்பு

இ) சிறிய துளி பெருவெள்ளமாகும்

ஈ) வெள்ளம் வந்தால் அணை போட வேண்டும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. நாட்டார் பாடல்களைப் பாடியவர்கள்

அ) நாட்டுப்புறமக்கள் ஆ) புலவோர் இ) நகர்மக்கள் ஈ) நாடோடிமக்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. நாட்டுக்குநாடு காலத்திற்குக் காலம் மாறுபடும் இயல்பினை உடையது

அ) பண்பாடு ஆ) நாகரிகம் இ) அறநெறி ஈ) கலாசாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. அறமிது மறமிது என்றறியக் கற்க வேண்டிய நூல்

அ) மூதுரை ஆ) நல்வழி இ) திருக்குறள் ஈ) நாட்டார் பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. யாரைக் காண்பதும் பேசுவதும் நன்று

அ) பொல்லாதவரை ஆ) நல்லவரை இ) கல்லாதவரை ஈ)இல்லாதவரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கார்ப்புச் சுவையுடைய பொருள்

அ) பாக்கு ஆ) புளி இ) மிளகாய் ஈ) பாகற்காய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. தமிழரிடமிருந்து, குடியுரிமை, மொழியுரிமை, கல்வியுரிமை, வாழ்வுரிமையைப் பறித்தவர்கள்

அ) ஆங்கிலேயர் ஆ) சிங்களவர் இ) பறங்கியர் ஈ) இசுலாமியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. சொல்லியத்தில் கருத்து தொடங்கும் சொல்

அ) தொடக்கம் ஆ) பயனிலை இ) எழுவாய் ஈ) செயப்படுபொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. தன்மை முன்னிலை படர்க்கை குறித்து நிற்பது

அ) முத்தமிழ் ஆ) மூவிடம் இ) முக்கனி ஈ) முப்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. தமிழர்வாழ்வில் எல்லா ________________ கிடைக்கின்ற மிகச்சிறந்த திங்கள் தை

அ) வலங்களும் ஆ) வளங்களும் இ) வழங்களும் ஈ) வரங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்ற பழமொழியின் கருத்து

அ) காற்றுள்ள போதே நெல் தூற்றவேண்டும்.

ஆ) செயலுக்குரிய சரியான பொழுதைத் தவறவிடுதல் ஆகாது.

இ) காற்றுள்ளபோதே பிறரைத் தூற்ற வேண்டும்.

ஈ) காற்றில்லாவிட்டால் தூற்ற முடியாது.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. தமிழ்ச்செல்வம் ஆகமாட்டாயா என்ற பாடலில் தமிழ் இறைவனார் என்று குறிப்பிடப்படுபவர்

அ) கனகசுப்புரத்தினம் ஆ) பெருஞ்சித்திரனாரர்

இ) ஒளவையார் ஈ) திருவள்ளுவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. நிகழ்கால இடைநிலைகள்

அ) த் ட் ற் இன் ன் ஆ) ப் வ் இ) கிறு கின்று ஈ) த் ட் ற் ன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. ஏதிலார் என்பதன் பொருள்

அ) ஏதும் இல்லாதவர் ஆ) பகைவர் இ) அகதிகள் ஈ)அநாதைகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21 புலவர் என்ற சொல்லுக்குப் பன்மை

அ) புலவோன் ஆ) புலவீர் இ) புலவன் ஈ) புலவோர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. குணப்பெயருக்குச் சிறந்த எடுத்துக்காட்டு

ஆ) கண் ஆ) அன்பு இ) படித்தல் ஈ) வேர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. தன் இனத்தவரை அழைத்துக் கூடி உண்ணும் பறவை

அ) மயில் ஆ) குயில் இ) காகம் ஈ) புறா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. ஓடுகின்றன என்பது

அ) பலர்பால் ஆ) பலவின்பால் இ) ஒன்றன்பால் ஈ) ஆண்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. ஒழுக்கத்தில் சிறந்தவரைத் தமிழர் ________________ எனப் போற்றுவர்.

அ) ஆன்றோர் ஆ) சான்றோர் இ) வள்ளல் ஈ) அறிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. ஒரு சொல் மட்டும் பொருத்தமற்றது

அ) உலகம் ஆ) ஞாலம் இ) வையகம் ஈ) வானம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. இலங்கைத்தீவு அமைந்துள்ள மாவாரி

அ) பசுபிக்மாவாரி ஆ) அந்தாட்டிக்மாவாரி இ) இந்துமாவாரி ஈ) ஆர்க்டிக்மாவாரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் குறித்து நிற்பது

அ) முன்னிலை ஆ) தன்மை இ) ஒருமை ஈ) படர்க்கை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?

அ) ஐவகை ஆ) அறுவகை இ) இருவகை ஈ) மூவகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பேரன்,மகன்,மருமகன்,தம்பி,மருகன் இச்சொற்கூட்டத்தில் ஒரு பொருள் தரும் இரு சொற்கள்

அ) மகன் மருமகன் ஆ) பேரன் மகன் இ) மருமகன் மருகன் ஈ) மகன் தம்பி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஓடுதல்,சிரித்தல் என்பன

அ) பொருட்பெயர் ஆ) சினைப்பெயர் இ) தொழிற்பெயர் ஈ) குணப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

2) **கீழ்வரும் பாடலைப் படித்து, கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தேனிருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டுபோல்
சீனியுள்ள இடத்தினைத்
தேடி ஊரும் எறும்புபோல்

பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியைப் போல்
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள் போல்

பள்ளமான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம் போல்
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயிலுவோம்

1. மக்கள் எப்படியான நாட்டுக்கு வந்து சேருவார்கள்?

____

____

2. எறும்பு எவ்விடத்தினைத் தேடி ஊரும்?

____

____

3. பள்ளமான இடத்தினை நோக்கி எது பாயும்?

____

____

4. தேனிருக்கும் இடத்தில் எது மொய்க்கும்?

____

____

5. நாங்கள் எப்படியான நூல்களைத் தேடிப் பயில வேண்டும்?

____

____

(புள்ளிகள் 10)

3) கீழுள்ள பந்தியை வாசித்து, அதனை உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.

மாமா ஒரு நாய் வாங்கி வந்தார்.அவர் அதை எனக்குப் பரிசாகத் தந்தார். நாயின் பெயர் வீமா. நான் ஒவ்வொரு நாளும் வீமாவுடன் வெளியே செல்வேன். அங்கு நான் வீமாவுடன் விளையாடுவேன். வீமா என்னுடன் மகிழ்ச்சியாக ஓடி விளையாடும். வீமா கருப்பு நிறமுடையது. அது நல்ல பழக்க வழக்கங்கள் உள்ள என் செல்லம்.

____

____

____

____

____

____

____

____

____

____

____

____

____

____

____

____

____

____

____

____

(புள்ளிகள் 05)

4) தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்துக்கு முழுவிடைதருக.

1. தமிழர் பண்பாட்டில் உயர்ந்த பண்புகளாகக் கருதப்பட்டவை எவை?

____

____

2. ஆமை கீழே வீழ்ந்து இறக்கக் கரணியம் என்ன?

____

____

3. வீட்டுத்தோட்டம் வைப்பதால் விளையும் நன்மைகள் இரண்டு தருக.

____

____

4. நாட்டார் பாடல் என்றால் என்ன?

____

____

5. ஆழமறியாமல் காலை விடாதே என்ற பழமொழியின் பொருளை விளக்குக.

____

____

6. மாமன்னன் எல்லாளன் இலங்கையை எவ்வாறு ஆண்டான்?

____

____

7. பழங்கால மக்களின் உணவு, உடை, உறையுள் எவை?

____

____

(புள்ளிகள் 15)

5) **தரப்பட்டுள்ள இலக்கண வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

1. நீ, நீங்கள், நாங்கள், என்ற சொல்லுடன் 'ஐ' சேர்த்து எழுதுக?

2. படர்க்கை என்னும் இடவகைக்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக?

3. வள்ளல் என்னும் சொல்லை வைத்து சொல்லியம் ஒன்று எழுதுக.

4. குணப்பெயர், காலப்பெயர் இரண்டிற்கும் இவ்விரண்டு எடுத்துக்காட்டு தருக?

5. கிளிகள் மாம்பழங்களைக் கொத்தி தின்றன. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைத் தருக?

(புள்ளிகள் 15)

6) கீழே காணும் பகுதியைப் படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

நாள்தோறும் நாம் பலவகை உணவுகளை உண்கின்றோம். சிற்றுண்டிகளைச் சுவைக்கின்றோம். பருகைகளைப் பருகுகின்றோம். இவ்வுணவுகள் பல்வேறு சுவைகளையுடையனவாக உள்ளன. இச்சுவைகளைத் தமிழர் ஆறாகப் பிரித்து, அறுசுவையெனப் பெயரிட்டனர். அவை கைப்பு, தித்திப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பனவாகும். இவையனைத்தும் இயற்கையின் சுவைகளாகும்.

நாம் பாகற்காயைச் சுவைத்து உண்கின்றோம். அது கைப்புச் சுவையுடையது. தேனைக் குடிக்கும் போது இனிப்பாக இருக்கிறது. மாங்காயைச் சப்பினால் புளிக்கிறது. உப்பை உமிழ்ந்து பார்த்தால் உவர்க்கும். பெருநெல்லிக்காயை மென்றால் துவர்ப்பை உணரலாம். மிளகாய்த் தூளிட்ட குழம்பின் காரத்தால் நாவில் உறைக்கிறது. இன்னும் சில உணவுகள் கலப்புச்சுவை கொண்டவையாகவுள்ளன. புளிப்பும் இனிப்பும் கொண்ட தக்காளிப்பழம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

தமிழர் விழா நாட்களிலும் உண்டாட்டுகளின் போதும் அறுசுவை உணவுகளைச் சமைப்பர். விருந்தோடு அமர்ந்து சுவைத்துண்டு மகிழ்வர். வாழ்க்கை இன்பமும் துன்பமும் இரண்டறக் கலந்தது. இதை உணர்த்தவே, அறுசுவை கொண்ட உணவை உண்பதாகக் கூறுவர்.

1. அறுசுவைகள் எவை?

____

2. உப்பின் சுவை எது?

____

____

3. கலப்புச் சுவையுள்ள கறிக்காய் எது?

____

4. தமிழர் அறுசுவை உணவுகளை எப்போது சமைப்பர்?

____

5. அறுசுவை கொண்ட உணவு எதனை உணர்த்துகிறது?

____

(புள்ளிகள் 10)

7) கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் நூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

1 தமிழர் பண்பாடு

2 நான் தமிழ் கற்கும் பள்ளி
- என் பள்ளியின் பெயர்
- சேர்ந்த ஆண்டு
- கல்வி கற்கும் வகுப்பு
- ஆசிரியர் மாணவர் தொகை
- கற்கும் பாடங்கள்
- நடைபெறும் விழாக்கள்
- தேர்வுகள்
- தமிழ் கற்பதால் ஏற்படும் நன்மை

(புள்ளிகள் 15)